# அரசாங்க அறிவித்தல்

**மதுவரிக் கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 52)**

மதுவரி அறிவித்தல் இலக்கம் : 08/2018

திருத்தப்பட்டவாறான மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அதே சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், இவ்வறிவித்தல் மூலம் 2018 ஏப்ரல் 16 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறும் வகையில், கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மரங்களைச் சீவுவதற்கான உரிமப்பத்திரக் கட்டணங்கள் திருத்தியமைக்கப்படுகிறது என இத்தால் பிரகடனப்படுத்துகிறேன்.

மங்கள சமரவீர
நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்

நிதி அமைச்சு,
கொழும்பு - 01.
2018, ஏப்ரல் 06 ஆம் திகதி

**மரங்களை சீவுவதற்கான உரிமக் கட்டணம்**

| | **கூட்டுறவு முறையின் கீழ் (ரூ.)** | **கூட்டுறவு முறையின் கீழ் அல்லாதவை (ரூ.)** |
|---|---|---|
| I. ஆண் பனை(மரம் ஒன்றுக்கு) | 10.00 | 25.00 |
| II. பெண் பனை(மரம் ஒன்றுக்கு) | 25.00 | 50.00 |
| III. தென்னை( மரம் ஒன்றுக்கு) | 25.00 | 50.00 |

2.

I. பதனீர் இற்காக தென்னை மர சீவலுக்கான குடிசைசார் உரிமம்(மரம் ஒன்றுக்கு) : ரூபா 50.00

II. பதனீர் இற்காக தென்னை மர சீவலுக்கான வர்த்தக உரிமம்(மரம் ஒன்றுக்கு) : ரூபா 100.00

**3. பொருட்கோடல் :-**

''கூட்டுறவு முறையின் கீழ்'' என்பது மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கம் அல்லது கொத்தணி எனப் பொருள்படும்.